1973 மார்ச் 12]

திரு. நா. வீராசாமி : தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகப் படம் எடுக்கிறபோது புரட்சிகரமான கருத்துக்கள் பலவற்றை நுழைத்தால்தான் முடியும். இப்படிப் புரட்சிகரமான கருத்துக்களை புகுத்தியிருக்கிறார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள் பல படங்களில். ஆகவே அவர்களுக்கு நேரம் இல்லாவிட்டாலும் அந்தப் படத்திற்காகக் கதை, வசனம் எழுதுவதற்காக, அப்படிப் பட்ட கருத்துக்களைப் புகுத்துவதற்காக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அவர்களை எங்கேயோ வெளியில் அழைத்துக் கொண்டு போய் எழுதி வாங்க நமது அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நல்ல யோசனை. அமைச்சர் முயற்சி எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களின் அப்படிப்பட்ட நல்ல தொரு முயற்சியில் துணை இருந்தால் நலமாக இருக்கும்.

சிறுவாடா கிராமத்திற்குச் சமுதாயக்கூடம்.

* 332 **வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சிறுவாடா அரிசன காலனியில் அமைக்கப்படும் சமுதாயக் கூடக் கட்டடம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடக் கட்டடம் கட்ட ஏதும் திட்டமில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த சிறுவாடா கிராமத்தில் ஹரிஜனக் காலனிக்கு ஒரு கம்யூனிட்டி ஹால் கட்டவேண்டும் என்று எப்போது கேட்டுக்கொள்ளப் பட்டது? அப்படி ஒரு ஆய்வு இல்லை என்றால் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆய்வு இல்லை என்று சொல்வதற்கில்லை. அந்தத் திருமணக் கூடம் கட்டவேண்டு மென்று அரசு முடிவு எடுத்தது. ஆனால் அங்கு ஒரு திருமணக் கூடம் கட்டவேண்டுமென்று சொன்னால் ஆயிரத்தில் இருந்து

இரண்டாயிரம் வரையில் ஹரிஜன மக்கள் இருந்தால் ரூ. 10,500க்கு திருமண மண்டபம் கட்டலாம். 2,000-க்கு மேல் ஹரிஜன மக்கள் குடியிருக்கிற காலனியாக இருந்தால் ரூ. 20,000 க்கு கட்டலாம். ஆனால் அந்த இடத்தில் மிகக் குறைவாக இருக்கிறார்கள், பெரும் பாலான வகையில் ஹரிஜன மக்கள் இல்லை என்ற ஒரு புகார் வந்ததன் காரணமாக அது இப்போது கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, மேற்படி சிறுவாடா கிராமம் கும்முடிப்பூண்டி துணை வட்டத்தில் உள்ள அரிஜனங்கள் அதிகமாக இருக்கும் ஒரு அரிஜனக் காலனியாகும். எனவே அந்தக் காலனிக்காக ஒரு சமுதாயக் கூடம் கட்டி முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் கருத்தோடு உடனடியாக எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதன் மீது புகார் வந்த காரணத்தினால் அதை மீண்டும் பரிசீலனை செய்து அதற்குரிய தகவலை இயக்குநர் இன்னும் தரவில்லை. அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று எண்ணிக்கையில் அதிகமாக ஹரிஜன மக்கள் வாழ்கிற பகுதியாக இருந்தால் நிச்சயமாக அது அடுத்த ஆண்டாவது எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த நான்கு வினாக்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன. இறுதியில் உள்ள நான்கு வினாக்களும் அமைச்சர்கள் வராத காரணத்தினால் ஒத்திவைக்கப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I make one submission? Some more questions may be included in the list of questions. Now only 20 minutes have elapsed...............

MR. DEPUTY SPEAKER: To-day I think it is not possible. But we have requested Hon. Minister to send answer expeditiously. அடுத்தது அரசினர் தீர்மானம்—தமிழ் நாடு சட்டப் பேரவையின் விதி. . .

(மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அவைக்குள் நுழைத்தார்.)

1973 மார்ச் 12]

THIRU R. PONNAPPA NADAR : The other questions can be taken up now, as the Hon. Minister for Agriculture has arrived.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடும் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கவும், விவசாய அமைச்சர் அவர்களது கேள்வி 337-ஐ எடுத்துக்கொள்கிறேன்.

சூரியகாந்திப் பயிர் சாகுபடி

*** 337 வினா—திரு. என். கிட்டப்பா :**

திரு. பி. பொன் சொக்கலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரியகாந்தி பயிர் சாகுபடியை விரிவுபடுத்த அரசு எடுத்துக் கொண்ட விசேஷ நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (1) எண்ணை வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் கோயில்பட்டியில் 26 ரகம் வெளி நாட்டு சூரியகாந்தி வித்துக்கள் வரவழைத்து ஆராய்ச்சி செய்யப் பட்டு, அவைகளில் இ.சி. 68414 என்னும் ரகம் சாகுபடிக்கு மிகவும் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(2) மாதிரி நிரூபணங்கள் எல்லா மாவட்டங்களிலும் செய்து காண்பிக்கப்பட்டது. ஒரு ஹெக்டேர் பரப்புள்ள நிருபண வயல் ஒன்றுக்கு ரூபாய் 300 மான்யமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(3) 1972-73-ல் மத்திய அரசு உதவியுடன் தமிழகத்தில் சூரிய காந்தி அபிவிருத்தித் திட்டம் ரூபாய் 26.175 லட்சம் செலவில் 2 லட்சம் ஏக்கரில் பயிரிட அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த சூரிய காந்தி பயிரிடப்படும் திட்டத்தால் அரசாங்கத்திற்கு ஏதாவது வருவாய் வருமா? அப்படி இல்லாமல், பயன் அடைகிறவர்களுக்கு மட்டும் ஊக்குவிக்கும் வேறு சிறப்புத் திட்டம் வைத்து இருக் கிறார்களா?